# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.68/2023** **நாள்** : 01.09.2023

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், நெசப்பாக்கத்தில் ரூ.86.94 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கே.கே.நகர் அண்ணா பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்.**

இன்று (01.09.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், நெசப்பாக்கத்தில் ரூ.86.94 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

**கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகள்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதி-10, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட சி.ஐ.டி நகர், அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர் நகர், நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, சாலிகிராமம் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 80 மில்லியன் லிட்டர் கழிவுநீர் (மழைக்காலங்களில் நாளொன்றுக்கு 118 மில்லியன் லிட்டர் வரை) 22 கழிவுநீர் உந்து நிலையங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு அண்ணா பிரதான சாலையில் உள்ள 5 மீட்டர் முதல் 9 மீட்டர் ஆழம் வரை பதிக்கப்பட்டுள்ள கான்கிரீட் குழாய்கள் மூலமாக நெசப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையத்திற்கு தற்போது அனுப்பப்பட்டு வருகிறது.

கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் உள்ள பகுதிகளில் மோசமான மண்ணின் தன்மையினாலும், கழிவுநீர் வாயு மூலமாகவும்

கழிவுநீர் குழாய்களின் மேல் பகுதி அரித்து மண் உள்வாங்கி பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டது. சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது காலதாமதம் ஏற்படுவதால் போக்குவரத்து தடைபட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டது.

இதற்கு மாற்று ஏற்பாடாக நிரந்தர தீர்வு காணும் வகையில் அண்ணா பிரதான சாலையில் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றியமைக்கும் பணிகள் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்ணா பிரதான சாலைக்கு வரும் கழிவுநீர் அனைத்தையும் அருகில் உள்ள அசோக் நகர், பழைய நெசப்பாக்கம், கே.கே.நகர் ‘A’ மற்றும் பாரதிதாசன் காலனி ஆகிய கழிவுநீர் உந்து நிலையங்களுக்கு திசை திருப்பி 7 புதிய கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், பழைய நெசப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து சுமார் 1.5 கி.மீ நீளத்திற்கு புதிய இரும்பு குழாய்கள் பதித்து நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்கும் பணிகளும், கே.கே.நகர் ‘A’ உந்து நிலையத்திலிருந்து சுமார் 1.1 கி.மீ நீளத்திற்கும் மற்றும் கே.கே.நகர் ‘B’ உந்து நிலையத்திலிருந்து 500 மீட்டர் நீளத்திற்கும், நடேசன் சாலை சந்திப்பு காமராஜர் சாலை வரை புதிதாக இரும்பு குழாய்கள் பதித்து இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகள் அனைத்தையும் முடித்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இத்திட்டத்தின் மூலம் சி.ஐ.டி நகர், அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர் நகர், நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, சாலிகிராமம் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 இலட்சத்து 64 ஆயிரம் மக்கள் பயன் பெறுவர்.

**<u>நெசப்பாக்கத்தில் செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான ராமாபுரம், போரூர், மணப்பாக்கம் மற்றும் முகலிவாக்கம் உள்ளிட்ட

பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.05.2023 அன்று நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் 5 கோடி லிட்டர் பயன்படுத்தப்பட்ட நீர் சுத்திகரிப்பு செய்யப்படும்.

தற்போது, செயல்பட்டுவரும் இந்நிலையத்தின் மூலம், பகுதி-10 (கோடம்பாக்கம்), பகுதி-11 (வளசரவாக்கம்) மற்றும் பகுதி-12 (ஆலந்தூர்) பகுதிகளில் உள்ள 5 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். மேலும், இக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளொன்றுக்கு 0.5 மெகாவாட் திறன் கொண்ட உயிர் வாயு இயந்திரத்தின் மூலம் 3,000 யூனிட் வரை மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் மேற்கண்ட தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 2.0 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பதற்கு புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை (Renewable energy) சென்னை குடிநீர் வாரியம் பயன்படுத்தி வருகிறது.

இவ்வாய்வின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.எ.எம்.வி.பிரபாகர ராஜ், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் திரு.இரா.சிவமுருகன், பகுதிப் பொறியாளர் திரு.ஜி.குளிர்ந்தராஜா, செயற்பொறியாளர் திரு.ஜெய்சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.